அரையாண்டுத் தேர்வு - 2024 - 2025

நேரம் : 3 மணி

கணக்குப்பதிவியல்

வகுப்பு : 11

பகுதி - I

மதிப்பெண்கள் : 90

I. சரியான விடையைத் தேர்வு செய்யவும் : (20 X 1=20)

1. நிதிநிலைக் கணக்கின் அடிப்படையாக விளங்குவது

(அ) சமூகக் கணக்கியல் (ஆ) காரியதரிசிகளின் கணக்கியல்

(இ) மேலாண்மைக் கணக்கியல் (ஈ) பொறுப்பு கணக்கியல்

2. இறுதி சரக்கிருப்பு, அடக்கவிலை அல்லது விற்று ஈட்டக் கூடிய மதிப்பு இதில் எது குறைவோ அதனடிப்படையில் மதிப்பிடப்படும் என்ற கணக்கியல் கோட்பாடு

(அ) முக்கியத்துவ மரபு (ஆ) பண மதிப்பீட்டுக் கருத்து (இ) முன்னெச்சரிக்கை மரபு (ஈ) நிகழ்வு தீர்வு / கருத்து

3. கணக்கியல் சமன்பாடு குறிப்பது

(அ) வியாபாரத்தின் முதல், சொத்திற்கு சமமானது

(ஆ) வியாபாரத்தின் பொறுப்புகள், சொத்திற்கு சமமானது

(இ) வியாபாரத்தின் முதல், பொறுப்புகளுக்கு சமமானது

(ஈ) வியாபாரத்தின் சொத்துகள், முதல் மற்றும் பொறுப்புகளுக்கு சமமானது

4. இரட்டைப்பதிவு முறையில் கணக்குகளைப் பதிவு செய்யும் போது நடவடிக்கைகள் பாதிப்பது

(அ) குறைந்தபட்சம் இரண்டு கணக்குகள் (ஆ) ஒரே கணக்கில், வெவ்வேறு தேதிகளில்

(இ) ஒரே கணக்கின் இரு பக்கங்களில் (ஈ) குறைந்தபட்சம் மூன்று கணக்குகள்

5. ஒரு கணக்கின் வரவு மொத்தத்தை விட பற்று மொத்தம் அதிகமாக இருப்பின் அதன் பொருள்

(அ) வரவு இருப்பு (ஆ) பற்று இருப்பு (இ) இருப்பு இன்மை (ஈ) பற்றும் மற்றும் வரவு இருப்பு

6. பற்று இருப்புகளும் மற்றும் வரவு இருப்புகளும் சமமாக இருக்கின்றனவா என அறிய அனைத்துப் பேரேட்டுக் கணக்குகளையும் கொண்டு தயாரிக்கப்படும் ஒரு பட்டியல்

(அ) குறிப்பேடு (ஆ) நாளேடு (இ) இருப்பாய்வு (ஈ) இருப்பு நிலைக் குறிப்பு

7. இருப்பாய்வு தயாரிக்கும் போது, கணக்காளர் இருப்பாய்வின் வரவு பக்கத்தில் மொத்த தொகை ₹ 200 குறைவாக இருப்பதைக் கண்டறிந்தார். அந்த வேறுபாட்டினை அவர் என்ன செய்வார்?

(அ) அனாமத்து கணக்கில் பற்று செய்வார் (இ) ஏதேனும் பற்று இருப்புக்கொண்ட கணக்கில் சரி செய்வார்

(ஆ) அனாமத்து கணக்கில் வரவு செய்வார் (ஈ) ஏதேனும் வரவு இருப்புக்கொண்ட கணக்கில் சரி செய்வார்

8. கொள்முதல் திருப்ப ஏடு பதிவு செய்வது

(அ) சரக்களித்தோருக்கு, உடனடியாக பணம் பெறாமல் திருப்பிய சரக்கு

(ஆ) அளித்தவரிடம் உடனடியாக பணம் பெறாமல் திருப்பிய சொத்துகள்

(இ) உடனடியாக பணம் பெற்றுக் கொண்டு சொத்து வாங்கியவரிடம் திருப்பியது

(ஈ) மேற்கண்ட எதுவுமில்லை

9. விற்பனை ஏட்டில் பதிவு செய்வதற்கு பயன்படும் அடிப்படை ஆவணம்

(அ) பற்றுக் குறிப்பு (ஆ) வரவு குறிப்பு (இ) இடாப்பு (ஈ) ரொக்க இரசீது

10. எந்தச் செலவிற்கு சில்லறை ரொக்கத்திலிருந்து கொடுக்கலாம்?

(அ) தபால் செலவு மற்றும் பயணச் செலவுகள் (ஆ) மேலாளரின் ஊதியம்

(இ) அறைகலன் மற்றும் பொருத்துகைகள் வாங்க (ஈ) மூலப் பொருட்கள் வாங்க

HMY-11-ACC-TM-1

Scanned with CamScanner

11. முப்பத்தி ரொக்க ஏட்டில், முன்னிருந்து தூக்கி எழுதப்பட்ட வங்கிமேல்வரைப்பற்றிருப்பு தோன்றுவது

(அ) ரொக்கப்பத்தி பற்றுப்பக்கம் (ஆ) ரொக்கப்பத்தி வரவுப்பக்கம்

(இ) வங்கிப்பத்தி பற்றுப்பக்கம் (ஈ) வங்கிப்பத்தி வரவுப்பக்கம்

12. ரொக்க ஏட்டின் வங்கிப் பத்தியின் பற்றிருப்பு என்பது

(அ) வங்கி அறிக்கையின் படி வரவிருப்பு (ஆ) வங்கி அறிக்கையின் படி பற்றிருப்பு

(இ) ரொக்க ஏட்டின் படி மேல்வரைப்பற்று (ஈ) மேற்கூறிய ஏதுமில்லை

13. வங்கி அறிக்கையின் படி இருப்பு ₹1,000. செலுத்திய காசோலை வங்கியால் இன்னும் வரவு வைக்கப்படாதது ₹2,000. ரொக்க ஏட்டில் வங்கிப்பத்தியின் இருப்பு எவ்வளவு?

(அ) ₹3,000 மேல்வரைப்பற்று (ஆ) ₹3,000 சாதகமான இருப்பு

(இ) ₹1,000 மேல்வரைப்பற்று (ஈ) ₹1,000 சாதகமான இருப்பு

14. இயந்திரம் நிறுவுவதற்கு செலுத்தப்பட்ட கூலியை கூலிக் கணக்கில் பற்று வைப்பது

(அ) பகுதி விடு பிழை (ஆ) விதிப்பிழை (இ) முழு விடு பிழை (ஈ) இருமுறை பதிந்த பிழை

15. கீழ்க்கண்ட பிழைகளில் எது இருப்பாய்வைப் பாதிக்காது?

(அ) ஒரு கணக்கில் தவறாக இருப்புக் கட்டுதல்

(ஆ) பேரேட்டில்எடுத்து எழுதும் போது தவறான கணக்கில் சரியான பக்கத்தில் பதிவு செய்தல்

(இ) ஒரு கணக்கில் தவறாகக் கூட்டுதல்

(ஈ) ஒரு பேரேட்டுக் கணக்கில் தவறான தொகையை முன்னெடுத்து எழுதுதல்

16. தேய்மானம் மற்றும் பராமரிப்புச் செலவுகளை கணக்கில் எடுத்துக் கொள்ளும் போது கீழ்க்கண்ட முறைகளில் எது சீரான தாக்கத்தை ஏற்படுத்தும்?

(அ) நேர்க்கோட்டு முறை (ஆ) குறைந்து செல் இருப்பு முறை

(இ) ஆண்டுத் தொகை முறை (ஈ) காப்பீட்டு முனைம முறை

17. கீழ்க்கண்ட எந்த முறை கால்நடைகள், விடுகருவிகள் போன்றவைகளுக்கு பயன்படுத்தப்படுகிறது

(அ) ஈடு நிதி முறை (ஆ) மறுமதிப்பீட்டு முறை

(இ) காப்பீட்டு முனைம முறை (ஈ) இயந்திர மணி நேர வீதமுறை

18. நடைமுறை முதலை அதிகரிப்பதற்காக இந்திய தொழில் வளர்ச்சி வங்கியிடம் பெற்ற நடுத்தர காலக் கடன் தொகை

(அ) முதலினச் செலவுகள் (ஆ) வருவாயினச் செலவுகள் (இ) வருவாயின வரவுகள் (ஈ) முதலின வரவுகள்

19. நற்பெயர் எவ்வாறு வகைப்படுத்தப்படுகிறது?

(அ) ஓர் நடப்புச் சொத்து (ஆ) ஓர் நீர்மைச் சொத்து (இ) புலனாகும் சொத்து (ஈ) புலனாகாச் சொத்து

20. முன் கூட்டிச் செலுத்திய காப்பீட்டு முனைமம் தோன்றுவது.

(அ) வியாபாரக் கணக்கில் பற்றுப் பக்கம் (ஆ) இலாப-நட்டக் கணக்கில் வரவுப் பக்கம்

(இ) இருப்புநிலைக்குறிப்பின் சொத்துகள் பக்கம் (ஈ) இருப்புநிலைக்குறிப்பின் பொறுப்புகள் பக்கம்

பகுதி – II

II. எவையேனும் 7 வினாக்களுக்கு விடையளிக்கவும்:

(வினா எண்.30 க்கு கட்டாயமாக விடையளிக்கவும்) (7 X 2=14)

21. கணக்கியல் தகவல்களில் ஆர்வமுடைய நபர்கள் யாவர்?

22. கணக்கியலில் முழு வெளியீட்டு கொள்கை என்றால் என்ன?

23. பின்வருவனவற்றை ஆள்சார் கணக்கு, சொத்து கணக்கு மற்றும் பெயரளவு கணக்கு என்று

வகைப்படுத்துக.

| | | | |
|---|---|---|---|
| (அ) முதல் | (ஆ) கொள்முதல் | (இ) உள் ஏற்றிச் செல் செலவு | (ஈ) கொடுபட வேண்டிய கூலி |

24. இருப்பாய்வு தயாரிக்கும் முறைகள் யாவை?

25. பயன் தீரும் சொத்துகள் என்றால் என்ன?

26. எதிர்ப்பதிவிற்கு உதாரணம் தருக.

27. இருப்பாய்வு தயாரிக்கும் முன் கீழ்க்கண்ட பிழைகள் கண்டறியப்பட்டன. அவற்றைத் திருத்தவும்.

| | |
|---|---|
| (அ) | விற்பனை ஏட்டில் ₹100 குறைவாகக் கூட்டப்பட்டுள்ளது |
| (ஆ) | கொள்முதல் ஏட்டில் ₹400 அதிகமாகக் கூட்டப்பட்டுள்ளது |
| (இ) | கொள்முதல் திருப்ப ஏட்டில் ₹600 அதிகமாகக் கூட்டப்பட்டுள்ளது. |
| (ஈ) | விற்பனைத் திருப்பஏட்டில் ₹700 குறைவாகக் கூட்டப்பட்டுள்ளது. |

28. பின்வரும் குறிப்பேட்டுப் பதிவுகளில் விடுபட்டதகவல்களை நிரப்புக.

| நாள் | விவரம் | பே.ப.எ. | பற்று ₹ | வரவு ₹ |
|---|---|---|---|---|
| | ..........க/கு ப<br>..........க/கு<br>(ரொக்கத்திற்கு கொள்முதல் செய்தது) | | 20,000 | 20,000 |
| | ரொக்க க/கு ப<br>..........க/கு ப<br>நிஹாரா க/கு<br>(₹18,800 பெற்றுக்கொண்டு நிஹாராவின் ₹19,000 றகான க/கு தீர்க்கப்பட்டது) | | ------<br>------ | ------ |

29. ஒரு நிறுமம் ₹50,000 மதிப்புள்ளகட்டடம் ஒன்றை வாங்கியது. கட்டடத்தின் பயனளிப்பு காலம் 10 ஆண்டுகள். மேலும் அதன் இறுதி மதிப்பு ₹5,000. நேர்க்கோட்டு முறையில் தேய்மானத் தொகை, மற்றும் தேய்மான விகிதம் கணக்கிடுக.

30. கீழ்க்காணும் தகவல்களிலிருந்து விற்ற பொருளின் அடக்கவிலையைக் கணக்கிடுக.

| விவரம் | ₹ |
|---|---|
| தொடக்கச் சரக்கிருப்பு | 8,000 |
| கொள்முதல் | 60,000 |
| நேரடிச் செலவுகள் | 5,000 |
| மறைமுகச் செலவுகள் | 6,000 |
| இறுதிச் சரக்கிருப்பு | 9,000 |

## பகுதி – III

III. எவையேனும் 7 வினாக்களுக்கு விடையளிக்கவும் :

(வினா எண்: 40 க்கு கட்டாயமாக விடையளிக்கவும்) (7 X 3 = 21)

31. இரட்டைப்பதிவு கணக்கியல் முறையின் பொன்னான விதிகளைத் தருக.

32. தேய்மானம் ஏற்படுவதற்கான காரணங்கள் யாவை?

33. வங்கிச் சரிகட்டும் பட்டியல் தயாரிப்பதற்கான மூன்று காரணங்களைத் தருக.



Scanned with CamScanner
Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

34. குறிப்பேட்டுப் பதிவுகளைத் தந்து, ரொக்க கணக்கில் எடுத்து எழுதுக. 2016, ஜூன்

| | |
|---|---|
| 1 | ரொக்கத்துடன் தொழில் தொடங்கியது 1,10,000 |
| 10 | கூடுதல் முதல் இட்டது 50,000 |
| 28 | சொந்த செலவுக்கு ரொக்கம் எடுத்துக் கொண்டது 20,000. |

35. பின்வரும் நடவடிக்கைகளை பொன்னியின் விற்பனை ஏடு பதிவு செய்க. 2017

ஆகஸ்டு 1 இடாப்பு எண் 68ன் படி, செந்திலுக்கு கடனுக்கு சரக்கு விற்றது ₹ 20,500

ஆகஸ்டு 4 இடாப்பு எண் 74ன் படி, மாதவனுக்கு கடனுக்கு சரக்கு விற்றது ₹ 12,500

ஆகஸ்டு 6 செல்வம் என்பவருக்கு ரொக்கத்திற்கு சரக்கு விற்றது ₹ 13,300

ஆகஸ்டு 8 மோகன் என்பவருக்கு கடனுக்கு சரக்கு விற்றது

20 நாற்காலிகள் ஒன்று ₹ 450 விதம்

2 மேசைகள் ஒன்று ₹ 1,000 விதம்

36. பின்வரும் நடவடிக்கைகளை குணால் என்பவரின் தனிப்பத்தி ரொக்க ஏட்டில் பதிவு செய்க. 2017 ஜனவரி

| | |
|---|---|
| 1 | கை இருப்பு ரொக்கம் 11,200 |
| 5 | இரமேஷ் என்பவரிடமிருந்து பெற்றது 300 |
| 7 | வாடகை செலுத்தியது 30 |
| 8 | ரொக்கத்திற்கு சரக்குகளை விற்றது 300 |
| 10 | மோகனுக்கு செலுத்தியது 700 |
| 27 | அறைகலன் ரொக்கத்திற்கு வாங்கியது 200 |
| 31 | சம்பளம் கொடுத்தது 100 |

37.

ஜாய் என்ற நிறுவனம் 1.4.2016 அன்று ₹ 75,000-க்கு இயந்திரம் ஒன்றை வாங்கியது. 31.3.2018 அன்று ₹ 62,000-க்கு அவ்வியந்திரத்தை விற்பனை செய்தது. நிலைத் தவணை முறையில் தேய்மானம் ஆண்டுக்கு 10% நீக்கப்பட வேண்டும். ஆண்டு தோறும் கணக்குகள் மார்ச், 31-ல் முடிக்கப்படுகிறது. விற்ற இயந்திரத்தின் மீதான இலாபம் அல்லது நட்டத்தை கணக்கிடுக.

38. கீழ்கண்ட கணக்குகளின் இருப்புகள் இருப்பாய்வில் பற்றுப்பத்தியில் இடம் பெறுமா அல்லது வரவுப்பத்தியில் இடம் பெறுமா எனக் காட்டுக:

| | | |
|---|---|---|
| (i) வெளித்தூக்குக் கூலி | (ii) எடுப்புகள் | (iii) தள்ளுபடிப் பெற்றது |
| (iv) வட்டிச் செலுத்தியது | (v) கொள்முதல் திருப்பம் | (vi) முதல் |

39. 2017, டிசம்பர் 31 நாளன்று, கீழ்க்கண்ட சரிக்கட்டுதல்களுக்குத் தேவையான சரிக்கட்டுப் பதிவுகள் தருக.

(i) கொடுபட வேண்டிய சம்பளம் ₹ 1200

(ii) முன்கூட்டிச் செலுத்திய காப்பீட்டு முனைமம் ₹ 450

(iii) போக்கெழுத வேண்டிய வாராக்கடன் ₹ 200

40. சஞ்சயின் ஏடுகளில் 31, டிசம்பர் 2017 ம் ஆண்டிற்கான வியாபாரக் கணக்கினை தயாரிக்கவும்.

| விவரம் | ₹ | விவரம் | ₹ |
|---|---|---|---|
| தொடக்கச் சரக்கிருப்பு | 570 | கொள்முதல் | 15,800 |
| விற்பனை | 26,200 | கொள்முதல் திருப்பம் | 90 |
| விற்பனைத்திருப்பம் | 60 | இறுதிச் சரக்கிருப்பு | 860 |



Scanned with CamScanner

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

பகுதி - IV

V. அனைத்து வினாக்களுக்கு விடையளிக்கவும்: (7 X 5 = 35)

41(அ) ஜெயசீலி என்னும் தனிவணிகர் ஒரு பலசரக்கு கடையினை நடத்தி வருகிறார். 2018, ஜனவரியில் அக்கடையின் நடவடிக்கைகள் பின்வருமாறு இருந்தன. அவைகளைக் குறிப்பேட்டில் பதிவு செய்க.

| | |
|---|---|
| 1 | ரொக்கத்துடன் தொழில் தொடங்கியது 80,000 |
| 2 | வங்கியில் செலுத்திய ரொக்கம் 40,000 |
| 3 | ரொக்கத்திற்கு கொள்முதல் செய்தது 5,000 |
| 4 | லிப்டன் நிறுவனத்திடமிருந்து சரக்குகளை கடனுக்கு கொள்முதல் செய்தது 10,000 |
| 5 | ஜாய் என்பவரிடம் ரொக்கத்திற்கு சரக்கு விற்றது 11,000 |
| 6 | சம்பளத்தை ரொக்கமாக வழங்கியது 5,000 |
| 7 | லிப்டன் நிறுவனத்திடம் ஜனவரி, 4 அன்று கொள்முதல் செய்ததற்கான தொகை காசோலை மூலம் செலுத்தப்பட்டது |
| 8 | ரொக்கத்திற்கு அறைகலன் வாங்கியது 4,000 |
| 9 | மின் கட்டணம் ரொக்கமாக செலுத்தப்பட்டது 1,000 |
| 10 | நிலை அறிவுறுத்தலின் படி வங்கி செலுத்திய காப்பீட்டு முனைமம் 300 |

(அல்லது)

(ஆ) கீழ்கண்ட நடவடிக்கைகளைக் கொண்டு குணசேகரன் அவர்களின் முப்பத்தி ரொக்க ஏட்டைத் தயாரிக்கவும். 2017, ஜனவரி

| | |
|---|---|
| 1 | ரொக்க இருப்பு 50,000 |
| 1 | வங்கி இருப்பு 90,000 |
| 2 | ரோகினி என்பவருக்கு கடனுக்குச் சரக்கு விற்றது 15,000 |
| 5 | ரோகினியிடமிருந்து ₹14,500 க்கான காசோலைப் பெறப்பட்டு அவர் கணக்கு தீர்க்கப்பட்டது. அக்காசோலை உடனே வங்கியில் செலுத்தப்பட்டது |
| 6 | ரொக்கம் வைப்பு இயந்திரத்தின் மூலம் வங்கியில் பணம் செலுத்தியது 18,000 |
| 7 | ஸ்ரீதருக்கு விற்ற சரக்கு ₹ 12,000. அவர் ₹ 11,800 எடுப்பு அட்டை மூலம் செலுத்தி கணக்கு தீர்த்துக் கொண்டார். அவர் பெற்ற தள்ளுபடி ₹ 200. |
| 10 | வங்கியிலிருந்து அலுவலகச் செலவுகளுக்காக பணம் எடுத்தது 2,000 |
| 12 | ராஜா என்பவரிடமிருந்து சரக்கு வாங்கியது ₹ 10,000. ₹ 9,800 கடன் அட்டை மூலம் செலுத்தப்பட்டு கணக்குத் தீர்க்கப்பட்டது. அவரிடமிருந்து பெற்ற தள்ளுபடி ₹ 200. |
| 14 | நதியா தேசிய மின்னணு பணப்பரிமாற்றம் மூலம் அனுப்பியது 18,000 |
| 27 | ரோகினியின் காசோலை மறுக்கப்பட்டது. |

42(அ) பாபு என்பவரது ஏடுகளிலிருந்து எடுக்கப்பட்ட கீழ்க்காணும் இருப்புகளைக் கொண்டு 31.3.2016 ஆம் நாளுக்குரிய இருப்பாய்வு தயாரிக்கவும்.

| விவரம் | ₹ | விவரம் | ₹ |
|---|---|---|---|
| கை ரொக்கம் | 7,000 | பெறுதற்குரிய மாற்றுச்சீட்டு | 7,000 |
| பற்பல கடனாளிகள் | 5,400 | பற்பல கடனீந்தோர் | 11,800 |
| சம்பளம் | 6,800 | முதல் | 25,000 |
| வாராக்கடன் | 200 | கொள்முதல் | 45,000 |

Scanned with CamScanner
Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

| | | | |
|---|---|---|---|
| தொடக்கச் சரக்கிருப்பு | 15,400 | விற்பனை | 50,000 |

(அல்லது)

(ஆ) பின்வரும் நடவடிக்கைகளின் கணக்கியல் சமன்பாட்டினை தயார் செய்க.

(அ) முருகன் ₹ 80,000 பணத்துடன் தொழிலைத் தொடங்கினார்.

(ஆ) ரொக்கத்திற்கு சரக்கு வாங்கியது ₹ 30,000.

(இ) ரொக்கமாக வழங்கிய சம்பளம் ₹ 5,000.

(ஈ) குமாரிடமிருந்து சரக்கு வாங்கியதற்கு, பணம் வைப்பு இயந்திரம் மூலமாக செலுத்தப்பட்டது ₹ 5,000.

(உ) கூடுதல் முதல் இட்டது ₹ 10,000.

43.(அ) பின்வரும் நடவடிக்கைகளைக் கொண்டு 2017 ஏப்ரல் மாதத்திற்கான சந்தோஷ் ஆடையகத்தின் கொள்முதல் ஏடு மற்றும் விற்பனை ஏடு தயார் செய்க. 2017

| |
|---|
| ஏப்ரல் 1 காஞ்சிபுரம் பிரசாத்திடமிருந்து கடனுக்கு சரக்கு வங்கியது |
| ஒரு மீட்டர் ₹ 450 விதம் 100 மீட்டர் சில்க் துணி |
| ஒரு மீட்டர் ₹ 180 விதம் 75 மீட்டர் வெல்வெட் துணி |
| ஏப்ரல் 10 சென்னை இரத்தினத்திற்கு கடனுக்கு சரக்கு விற்றது |
| ஒரு மீட்டர் ₹ 490 விதம் 60 மீட்டர் சில்க்துணி |
| ஒரு மீட்டர் ₹ 210 விதம் 50 மீட்டர் வெல் வெட் துணி |
| ஏப்ரல் 18 நாதன் நிறுவனம் நம்மிடமிருந்து கடனுக்கு வாங்கியது |
| ஒரு மீட்டர் ₹ 510 விதம் 100 மீட்டர் சில்க் துணி |
| ஏப்ரல் 20 மதுரை, ஹரிராம் துணியகத்திடமிருந்து கடனுக்கு சரக்கு வாங்கியது |
| கட்டு ஒன்று ₹ 730 விதம் 50 கட்டுகள் காடாத் துணி |
| கட்டு ஒன்று ₹ 650 விதம் 80 கட்டுகள் காலிக்கோ துணி |
| ஏப்ரல் 24 கரூர், மோகனிடமிருந்து ரொக்கத்திற்கு வாங்கியது |
| சட்டைத் துணிகள் மதிப்பு ₹ 7,000 |
| சேலைகள் மதிப்பு ₹ 25,000 |

(அல்லது)

(ஆ) பின்வரும் நடவடிக்கைகளை நேரடியாகப் பேரேட்டில் எடுத்து எழுதி பேரேட்டு கணக்குகளை தயாரிக்கவும் .2017, ஜூன்

| | |
|---|---|
| 1 | ராஜா ரொக்கத்துடன் தொழில் தொடங்கியது ₹ 50,000 |
| 6 | ரொக்கத்திற்கு சரக்கு விற்றது ₹ 8,000 |
| 8 | தேவி என்பருக்கு கடனுக்கு சரக்கு விற்றது ₹ 9,000 |
| 15 | ரொக்கம் கொடுத்து சரக்கு வாங்கியது ₹ 4,000 |
| 20 | சாந்தி என்பவரிடம் கடனாக சரக்கு வாங்கியது ₹ 5,000 |

44.(அ) கீழ்காணும் விவரங்களிலிருந்து டிசம்பர் 31, 2017-ம் நாளுக்குரிய வங்கிச் சரிக்கட்டும் பட்டியல் தயார் செய்து, வங்கி அறிக்கையின் படியான இருப்பினைக் கண்டறிக.

| விவரம் | ₹ |
|---|---|
| (i) ரொக்க ஏட்டின் படி மேல்வரைப்பற்று | 10,000 |
| (ii) செலுத்திய காசோலை இன்னும் வரவு வைக்கப்படாதது | 5,000 |
| (iii) விடுத்த காசோலை இன்னும் செலுத்துகைக்கு முன்னிலைப்படுத்தப்படாதது | 1,000 |

Scanned with CamScanner

| | |
|---|---|
| (iv) வங்கி வாடிக்கையாளரிடமிருந்து நேரடியாகப் பெற்றது | 500 |
| (v) வங்கி பற்று வைத்த மேல்வரைப்பற்று மீதான வட்டி | 1,000 |
| (vi) வங்கியால் தவறுதலாக பற்று வைக்கப்பட்ட தொகை | 300 |

(அல்லது)

(ஆ) ஆனந்த் என்பவரின் கீழ்க்கண்ட நடவடிக்கைகளை ரொக்கம் மற்றும் தள்ளுபடி பத்திகளுடைய ரொக்க ஏட்டில் பதிவு செய்யவும். 2017 டிசம்பர்

1 கைவச ரொக்கம் 19,500

4 ரொக்கத்திற்கு சரக்கு விற்றது 32,000

5 காந்தியிடம் கடனுக்கு கொள்முதல் செய்தது 20,000

9 கோபுவிடம் பெற்றது 11,800 அவருக்கு அளித்த தள்ளுபடி 200

15 மின் கட்டணம் ரொக்கமாகச் செலுத்தியது 12,500

17 ரொக்கம் செலுத்தி கணிப்பொறி மற்றும் அதன் இதர பாகங்களை வாங்கியது 16,800

25 காந்திக்கு ₹ 19,700 செலுத்தி அவர் கணக்கு முழுவதையும் தீர்த்துக் கொண்டது

28 திருவேங்கடத்திடம் ரொக்கம் பெற்றது 8,900 அவருக்கு அளித்த தள்ளுபடி 100

30 வியாபார செலவுகளை ரொக்கமாகச் செலுத்தியது 3,500

45.(அ) கீழ்க்காணும் தகவல்களிலிருந்து 2018, மார்ச் 31 ஆம் நாளோடு முடிவடையும் ஆண்டிற்குரிய இலாப - நட்டக் கணக்கு தயாரிக்கவும்.

| விவரம் | ₹ | விவரம் | ₹ |
|---|---|---|---|
| மொத்த இலாபம் கீ/கொ | 1,50,000 | விளம்பரச் செலவுகள் | 3,800 |
| வெளித்தூக்குக்கூலி | 25,500 | வாராக்கடன் | 8,500 |
| அலுவலக வாடகை | 7,000 | பங்காதாயம் பெற்றது | 9,000 |
| அலுவலக எழுதுபொருள் | 3,500 | பெற்ற தள்ளுபடி | 4,600 |
| வழங்கல் செலவுகள் | 2,000 | பெற்ற வாடகை | 7,000 |

(அல்லது)

(ஆ) இருப்பாய்வின் படி பற்பல கடனாளிகள் ₹ 26,000

இருப்பாய்வின் படி வாராக்கடன் ₹ 1,000

<u>சரிக்கட்டுதல்:</u> கூடுதல் வாராக்கடன் ₹ 2,500

சரிக்கட்டுப் பதிவு தந்து இவ்விவரங்கள் 2016 மார்ச் 31 ஆம் நாளைய இறுதிக்கணக்குகளில் எவ்வாறு தோன்றும் எனக் காட்டவும்.

46.(அ) பின்வரும் பிழைகள் இருப்பாய்வு தயாரித்தபின் கண்டறியப்பட்டன. அனாமத்துக் கணக்கு இருப்பதாகக் கருதி பிழைகளைத் திருத்தம் செய்யவும்.

(அ) அருணுக்கு ₹ 152 க்கு கடனுக்கு சரக்கு விற்றது. அருணின் கணக்கில் ₹ 125 என எடுத்தெழுதப்பட்டுள்ளது.

(ஆ) லட்சுமியிடம் கடனுக்கு ₹ 550 க்கு சரக்கு கொள்முதல் செய்தது. அவரது கணக்கில் ₹ 505 என வரவு வைக்கப்பட்டுள்ளது.

(இ) அபிரூபாவிடமிருந்து கடனுக்கு ₹ 404 க்கு அறைகலன் வாங்கியது. அறைகலன் கணக்கில் ₹ 440 என பற்று வைக்கப்பட்டது.

Scanned with CamScanner

(ஈ) ₹ 200 ரொக்கத்திற்கு இயந்திரம் வாங்கியது பேரேட்டில் இயந்திரக் கணக்கில் எடுத்து எழுதப்படவில்லை.

(உ) கொள்முதல் ஏட்டின் கூட்டுத் தொகை ₹ 89 முன் எடுத்து எழுதும் போது ₹ 98 என எழுதப்பட்டுள்ளது.

(அல்லது)

(ஆ) சுதா நிறுமம் ஏப்ரல் 1, 2008 அன்று ₹ 64,000 மதிப்புள்ள இயந்திரம் வாங்கியது. இயந்திரத்தை நிறுவுவதற்காக ₹ 28,000 செலவு செய்தது. ஆண்டுக்கு 10% தேய்மானம் நேர்க்கோட்டு முறையில் கணக்கிட வேண்டும். இயந்திரம் பயனற்றுப் போனதால் 30 ஜுன் 2010 அன்று ₹ 52,000 க்கு விற்கப்பட்டது. ஒவ்வொரு ஆண்டும் கணக்குகள் டிசம்பர் 31-ல் முடிக்கப் பெறுகின்றன. இயந்திரக் கணக்கு மற்றும் தேய்மான கணக்கு தயாரிக்கவும்.

47.(அ) கீழ்க்காணும் தகவல்களிலிருந்து ராமசுந்தரி என்பவரின் ஏடுகளில் 2017, டிசம்பர் 31 ஆம் நாளோடு முடிவடையும் ஆண்டிற்குரிய வியாபார ,இலாப நட்டக் கணக்கையும் அந்நாளைய இருப்புநிலைக்குறிப்பையும் தயாரிக்கவும்.

| விவரம் | ₹ | விவரம் | ₹ |
|---|---|---|---|
| தொடக்கச் சரக்கிருப்பு | 2,500 | விற்பனை | 7,000 |
| கூலி | 2,700 | கொள்முதல் | 3,300 |
| இறுதிச் சரக்கிருப்பு | 4,000 | சம்பளம் | 2,600 |
| பெற்ற தள்ளுபடி | 2,500 | முதல் | 52,000 |
| இயந்திரம் | 52,000 | வங்கி ரொக்கம் | 6,400 |
| கடனீந்தோர் | 8,000 | | |

(அல்லது)

(ஆ) கீழ்க்காணும் செலவினங்களையும், வரவினங்களையும் முதலினமா அல்லது வருவாயினமா என வகைப்படுத்துக.

(i) நிலைச்சொத்து வாங்குவதற்காக, இயக்குனரின் வெளிநாட்டுப் பயணத்திற்கு செலவழிக்கப்பட்ட தொகை ₹ 10,000.

(ii) பெறுதற்குரிய கடனாளிகளிடமிருந்து அந்த வருடத்தில் பெற்ற தொகை.

(iii) புதிய கட்டடம் கட்டுவதற்காக பழைய கட்டடத்தை இடிப்பதற்கு மேற்கொண்ட செலவு.

(iv) தீ யினால் இயந்திரத்தில் ஏற்பட்ட பாதிப்பிற்காக பெறப்பட்ட காப்பீட்டுரிமைத் தொகை.

(v) வாகனத்தின் எரிபொருள் திறனை அதிகரிக்க, அதன் இயந்திரத்தைப் புதுப்பிக்க மேற்கொண்ட செலவு ₹ 25,000.



Scanned with CamScanner
Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com